**Spl.CC.No.80/2019**

**06-10-2025** ஆம் தேதி அன்று சாட்சி **P.W.54** சண்முகபிரியா மீண்டும் மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**.**

**(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜரில்லை. 205 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

**நான் 2003 ல் குரூப் 1 ல் டி.எஸ்.பி ஆக பணியில் சேர்ந்தேன். நான் கோபி செட்டிபாளையம், தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். தமிழகத்தின் அரசியல் சூழ்நிலைகள் எனக்கு தெரியும். பொதுவாக தி.மு.க., அ.தி.முக உறுப்பினர்கள் மீதும், அ.தி.மு.க., தி.மு.க உறுப்பினர்களின்மீதும் ஆட்சி தொடரும்பொழுது வழக்கு தாக்கல் செய்வது எனக்கு தெரியும் என்று சொன்னால், அது இந்த வழக்கிற்கு தேவையில்லை என்பது எனது தாழ்மையான கருத்தாகும். இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் திராவிட முன்னேற்ற கழகத்தை சேர்ந்தவர் என்று சொன்னால் சரிதான். அவர் இரண்டு முறை அமைச்சராக இருந்தார் என்று எனக்கு தெரியும். இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட சமயத்தில் அ.தி.மு.க. ஆட்சியில் இருந்தது என்று எனக்கு தெரியும். நான் 2005 லிருந்து 2007 வரை கோவை மாவட்டத்தில் கோவை மாநகர காவல் உதவி ஆணையராக (சட்டம் ஒழுங்கு) கிழக்கில் இருந்தேன். அதன் பின்பு கோவை மாவட்டத்தில் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் இருந்தேன். பின்னர் பதவி உயர்வு பெற்று 2010 ல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணியாற்றினேன். நான் கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பொறுப்பேற்ற பின்னர் சுமார் ஒரு வருடம் கழித்து இந்த வழக்கை பதிவு செய்தேன். அந்த வருடத்தில் அ.தி.மு.க ஆட்சி பொறுப்பேற்று**

ஆறு மாதத்திற்கு பின்னர் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். எனது இயக்குனரகத்திலிருந்து வரப்பெற்ற தகவலின் அடிப்படையில் நான் முதல்நிலை விசாரணை செய்து வழக்கை பதிவு செய்தேன். இயக்குனரகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அறிவுறுத்தலுடன் கிரினிவாசபிரசாத் என்பவரது மனுவும் இணைக்கப்பட்டிருந்தது என்று சொன்னால் சரிதான். அந்த கடிதத்தை நான் படித்து பார்த்தேன். அதன் அடிப்படையில்தான் நான் முதல் நிலை விசாரணையை ஆரம்பித்தேன். எனது முதல் நிலை விசாரணைக்கு பின்புதான் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தேன். ஆனால் கிரினிவாசபிரசாத்தின் புகாரை நான் முதல் தகவல் அறிக்கையாக எடுத்து கொள்ளவில்லை. கிரினிவாசபிரசாத் என்ற ஒருவர் இருக்கிறாரா என்ற விவரத்தை நான் தெரிந்து கொள்ளவில்லை. அந்த நபர் நாகர்கோவிலை சேர்ந்தவர் என்று முகவரியை வைத்து தெரிந்து கொண்டேன். இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரியாக கிரினிவாசபிரசாத்தை பற்றி நான் எந்த தகவலும் சேகரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். காரணம் அவர் அந்த கடிதத்தில் 28 அமைச்சர்களை பற்றிய சொத்து விவரங்களை குறிப்பிட்டு இருந்தார். அதன் அடிப்படையில்தான் நான் இந்த எதிரியின்மீது முதல் விசாரணை செய்து வழக்கு பதிவு செய்தேன். அதனால் கிரினிவாசபிரசாத்தை நான் விசாரிக்கவில்லை. மேலும் அந்த புகாரானது CBI க்கு எழுதப்பட்டு எங்களுக்கு அனுப்பப்பட்டதாகும். கிரினிவாசபிரசாத் எங்களுக்கு நேரடியாக அந்த மனுவை அனுப்பவில்லை. அந்த மனுவை நான் ஏன் இறுதி அறிக்கையுடன் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அது confidential ஆவணம் என்பதாலும் அதன் அடிப்படையில் நான் முதல் விசாரணை செய்து தகவல் சேகரித்து பின்னர் வழக்கு பதிவு செய்த காரணத்தினால் அதை சேர்க்கவில்லை. நான் conferred IPS என்று சொன்னால் சரிதான். Official Secret Act சட்டத்தை பற்றி எனக்கு தெரியும். அந்த சட்டத்தின்படி சொல்லப்பட்ட

ஆவணங்கள் தவிர மற்ற ஆவணங்கள் Confidential ஆவணங்கள் இல்லை என்று சொன்னால் சட்டப்படி சரிதான். Confidential ஆவணத்தின்மீது மந்தனம் என்று குறிப்பிடுவார்கள் என்று சொன்னால் சரிதான். சில ஆவணங்களில் For your eyes only என்றும் குறிப்பிடுவார்கள் என்று சொன்னால் சரிதான். கிரினிவாசபிரசாத் எழுதிய மனுவை இணைத்து அரசிடமிருந்து இயக்குனரகத்திற்கு அனுப்பி பின்பு எனக்கு அனுப்பிய கடிதத்தில் மந்தனம் என்று எழுதப்பட்டுள்ளது. கிரினிவாசபிரசாத் அவரது மனுவில் முதலமைச்சரிலிருந்து ஆரம்பித்து அனைத்து அமைச்சர்களைப்பற்றிய சொத்து விவரங்களை கூறியுள்ளார் என்று சொன்னால் சரிதான். அவரது மனுவில் நான்கு பத்திகள் உள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த மனுவில் இந்த வழக்கின் எதிரியை பற்றி எதுவும் குறிப்பிட்டுள்ளாரா என்றால், 2006 ல் எதிரி எவ்வளவு சொத்து மதிப்பு குறிப்பிட்டிருந்தார் என்றும், 2011 ல் எவ்வளவு சொத்து மதிப்பு பற்றி குறிப்பிட்டிருந்தார் என்றும் உள்ளது. 2006 மற்றும் 2011 ல் எதிரி தேர்தல் சமயத்தில் தேர்தல் ஆணையத்தில் சமர்ப்பித்த சொத்து விவரங்கள் வெப்சைட்டில் காணப்படும் என்று சொன்னால் சரிதான். அதைதான் கிரினிவாசபிரசாத் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த சமயத்தில் மற்ற அமைச்சர்கள் மற்றும் முதலமைச்சர்களுக்கு எதிராக இதுபோன்ற மனு அல்லது புகார் வரப்பெற்றதா என்று நான் அந்த, அந்த மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அதிகாரிகளிடம் நான் விசாரித்தேனா என்றால், விசாரிக்கவில்லை. கிரினிவாசபிரசாத் மனுவில் குறிப்பிட்டுள்ள பெரும்பாலான நபர்கள் இன்றும் அமைச்சர்களாக உள்ளனர் என்று சொன்னால் சரிதான். கிரினிவாசபிரசாத் ஒரு மோசமான நபர் என்று எனக்கு தெரியாது. அவர் அனுப்பிய மனுவில் உள்ள விவரங்களை மட்டும்தான் நான் எடுத்து கொண்டேன். தவறான ஒரு நபர் கொடுத்த மனுவின் அடிப்படையில் நான் விசாரணை மேற்கொண்டேன் என்று சொன்னால்

சரியல்ல. இந்த வழக்கு பதிவு செய்த சமயத்தில் ஒன்றிணைந்த கோயமுத்தூர் மாவட்டத்தில் சுமார் ஒருகோடி மக்கள் இருந்திருப்பார்கள் என்று சொன்னால் சரிதான். ஆனால் எதிரியை பற்றி கோவை மாவட்டத்திலிருந்து எந்த ஒரு புகாரும் வரவில்லை என்று சொன்னால் சரிதான். இயக்குனரகத்திடமிருந்து தகவல் வந்திருக்காவிட்டால் இந்த புகாரை நான் பதிவு செய்திருக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கின் எதிரி பரம்பரையாக வசதி படைத்தவர் என்று சொன்னால், எனக்கு அதை பற்றி தெரியாது. அவரது மனைவியும் மிகவும் வசதி படைத்தவர் என்று சொன்னால், எனக்கு அதை பற்றி தெரியாது. இவ்வழக்கின் எதிரி திரைப்பட தயாரிப்பாளர் என்று சொன்னால் எனக்கு அதை பற்றி தெரியாது. அவர் ஒரு திரையரங்கம் வைத்துள்ளார் என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. அவர் ஒரு film Distributor என்று சொன்னால் எனக்கு தெரியாது. அவர் கொங்கு சினி ஆர்ட்ஸ் என்ற பெயரில் பட தயாரிப்பு நிறுவனம் வைத்திருந்தார் என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. அவர் தயாரித்த கோபுரங்கள் சாய்வதில்லை என்ற படம் சில்வர் ஜூப்லி படம் என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. அவர் கொங்கு சினி ஆர்ட்ஸ் என்ற பேனரில் படம் தயாரித்தும், விஜயா பிலிம்ஸ் என்ற பெயரில் film Distributor ஆகவும் தொழில் செய்து வந்தார் என்று சொன்னால் எனக்கு அதை பற்றி தெரியாது. கொங்குநாடு பைனான்ஸ் என்ற நிறுவனத்தையும் அவர் நடத்தி வந்தார் என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. அழகப்பா சிமெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற பெயரில் அரியலூரில் சிமெண்ட் தயாரிப்பு நிறுவனம் ஒன்று வைத்திருந்தார் என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. விஜயலட்சுமி டிரான்ஸ்போர்ட் என்ற நிறுவனத்தை நடத்தி 11 லாரிகள் வைத்து நடத்தி வந்தார் என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. ராயல் என்பீல்டு பைக்கிற்கு கோவையில் வினியோகஸ்தராக இருந்தார் என்று சொன்னால்

எனக்கு அதை பற்றி தெரியாது. Five star construction company என்ற நிறுவனத்தையும் நடத்தி வந்தார் என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. எதிரி இரண்டுமுறை அமைச்சராக இருந்தார் என்று சொன்னால் சரிதான். என்னுடைய புலன் விசாரணையின்பொழுது மேற்சொன்ன நிறுவனங்கள் தொழில்கள் சம்மந்தமாக வருமான வரி கணக்கில் காண்பிக்கப்படாத காரணத்தினாலும், எதிரிக்கு போதிய வாய்ப்புகள் கொடுக்கப்பட்டும் அவர் மேற்சொன்ன தொழில்களைப் பற்றி எதையும் சொல்லாத காரணத்தினாலும், Registrar of company யிலிருந்து எனக்கு எந்த விவரங்களும் வரப்பெறாத காரணத்தினால் மேற்சொன்ன விவரங்கள் எனக்கு தெரியவில்லை. என்னுடைய புலன் விசாரணையில் மேற்சொன்ன தொழில்களை அவர் நடத்தி வந்த விவரம் எனக்கு தெரியவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் சாட்சி அளித்தவர்களை தவிர வேறு யாரையும் நான் விசாரிக்கவில்லை. எதிரி கொடுத்த பதில் திருப்திகரமாக இல்லாததால் வழக்கு தாக்கல் செய்தேன்.

அ.த.சா.ஆ.117 ல் உள்ள Statement No.1 ல் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள குடும்ப உறுப்பினர்களின் விவரங்களை யார், யார் என்று நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். மேலே குறிப்பிட்ட Statement நெ.1 ல் குறிப்பிடப்பட்டுள்ள 55 சொத்து விவரங்களில் எதிரி மற்றும் அவரது இறந்துபோன மனைவி பெயரில் உள்ள சொத்து விவரங்களைதான் நான் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படுவதற்கு முன்பே எதிரியின் மனைவி 2004 ல் ஒரு சாலை விபத்தில் மரணம் அடைந்தார் என்று சொன்னால் சரிதான். அ.த.சா.ஆ.117 ல் Statement 1 ல் சொல்லப்பட்டுள்ள முதல் அயிட்ட சொத்து 1975 ல் வாங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். அயிட்டம் 1 ல் நான் குறிப்பிட்டுள்ள

தொகையானது சொத்து ஆவணத்தில் குறிப்பிட்டிருந்த அரசு வழிகாட்டு மதிப்பை நான் குறிப்பிட்டுள்ளேன். **Statement** களில் நான் குறிப்பிட்டுள்ள அசையா சொத்து மதிப்புகளை அந்தந்த ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள அரசு வழிகாட்டு மதிப்பைதான் நான் குறிப்பிட்டுள்ளேன். 13-05-2006 ல் நான் ஆவணங்கள் அடிப்படையில் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள அரசு வழிகாட்டு மதிப்பைதான் நான் எடுத்து கொண்டேன் என்றால் சரிதான். அசையா சொத்துக்கள் சம்மந்தப்பட்ட ஆவணங்களில் கண்டுள்ள அரசு வழிகாட்டு மதிப்பு சரிதானா என்று நான் சம்மந்தப்பட்ட எஸ்.ஆர்.ஓ விடம் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால், இல்லை. ஆனால் சம்மந்தப்பட்ட அனைத்து எஸ்.ஆர்.ஓ. க்களையும் நான் வரவழைத்து விசாரித்து அவர்கள் கூறிய விவரங்களின் அடிப்படையில்தான் நான் **Statement** ஐ தயாரித்து தாக்கல் செய்துள்ளேன். அனைத்து எஸ்.ஆர்.ஓ.க்களுக்கும் நான் சம்மன் அனுப்பிதான் விசாரித்தேன். அந்த சம்மன்களை ஆவணமாக குறியீடு செய்யவில்லை.

**(எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டலின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)**

**sd/Shanmuga Priya,**

Taken down by me/typed down to my dictation in open Court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/G.Vijaya
Principal District and Sessions Judge,
Coimbatore.